ளெல்லாம்கூட வந்தன. அங்கிருக்கும் இடங்கள், மற்றவைகளெல்லாம் அதுபற்றி பார்க்கப்பட்டன. ஆனால் நாங்குநேரி பகுதி, மற்ற பகுதிகளில் இருப்பவர்களெல்லாம் பாளையங்கோட்டையில் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறார்கள். அம்பாசமுத்திரம் தாலுக்காவின் சில பகுதியினர் பாளையங்கோட்டையில் இருப்பது நல்லது என்று கருதுகிறார்கள். இப்படி இருவேறு கருத்துக்கள் இருப்பதன் காரணமாக எந்த முடிவும் எடுக்காமல், இருக்கிற இடத்திலேயே இருந்து வருகிறது.

நாட்டறம்பள்ளி உயர்நிலைப்பள்ளி.

* 252 வினா.—திரு. ஜி. இராமசாமி : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாட்டறம்பள்ளி உயர்நிலைப்பள்ளியில் பொறியியல் மற்றும் வணிகவியல் பிரிவு தொடங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. ராமசாமி : தலைவர் அவர்களே, எஸ். எஸ். எல். சி. வகுப்ப தேறிய மாணவாகள் பிறகு வேலை கிடைக்காமல் அவதிப் படக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதைப் போக்கும் பொருட்டு, உயர்நிலைப் பள்ளிகளிளெல்லாம் பொறியியல், வணிகவியல் போன்ற பாடங்கள் போதிக்கத்தக்க வசதியை ஏற்படுத்தினால், மாணவர்கள் வாழ்வுக்கு வழி ஏற்படுமல்லவா ? அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே "பைஃபர் கேடட் கோர்ஸ்" என்று இருந்தது. விருப்பப் பட்டவர்கள் அதை எடுத்துப் படிக்க வகை செய்யப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக இப்பொழுது காம்ப்ரஹன்சிவ் ஸ்கூல் என்று, எந்தெந்த உயர் நிலைப் பள்ளிக்குப் பக்கத்தில் என்ன தொழில்கள் இருக்கின்றனவோ அவற்றைப்—பள்ளி நேரம் போக மீதி நேரத்தில்—பயன் படுத்தும் ஒரு திட்டம் வகுத்து, சென்ற ஆண்டு 19 உயர்நிலைப் பள்ளிகளில் பரிட்சார்த்த மாகக் கொண்டுவந்திருக்கிறோம். அதை வேறு பல பள்ளிகளுக்கும் விரிவு படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு இருக்கிறது. அந்தந்தப் பள்ளிகளில் அதற்கான வசதிகள், சுற்றுச் சூழ்நிலைகள், இடவசதி ஆகிய வற்றை ஆராய்ந்து தக்க வகையில் முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இப்பொழுது சில பள்ளிக்கூடங்களில் இது ஒரு "பார்ட் டைம்" படிப்பாக வைத்திருக் கிறார்கள். இதை முழு நேரப் படிப்பாக வைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "பார்ட் டைம்"ஆக வைக்காமல், முழு நேரப் வைத்தால் வேறு பல பாடங்களுக்குரிய நேரத்தைக் குறைக்க வேண்டி வரும். மற்ற பாடங்களுக்கும் உரிய நேரம் கொடுக்க வேண்டியிருக்கிறது. தொழில் அறிவு வளர வேண்டும் என்பதற்காக மற்ற பாடங்களுக்குரிய நேரத்தை அதிகமாகக் குறைப்பதற்கு இல்லை. கூடுமான வரையில் தொழிற்கல்விக்குறிய நேரத்தைக் கொஞ்சம் அதிகப்படுத்தி, மற்ற படிப்புகளுக்கு சற்று நேரத்தைக் குறைக்கலாம். தொழிற்கல்விக்கே முழுநேரத்தை ஒதுக்கினால் மற்ற வகுப்புகளின் நேரத்தைக் குறைக்கவேண்டிவரும்.

Melpuram Government School.

* 253 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there are proposals under the consideration of the Government to upgrade Melpuram Government Middle School, Kanyakumari district, into a High School?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மேல்புரம் அரசு மத்திய தரப் பள்ளிக்கூடத்தில் இப்பொழுது ஒரு உயர்நிலைப்பள்ளிக்கூடத்திற்குள்ள ஸ்ட்ரெங்க்த் இருக்கிறது. அந்த ஊரிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்கு செல்ல வேண்டுமென்றால், மூன்று நான்கு மைல் நடந்து மார்த்தாண்டத்திற்கு செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தத் தேவையை உணர்ந்தாவது இந்த மத்தியதரப்பள்ளியாக உள்ளதை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப்பள்ளியைச் சுற்றி ஒரு ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்கு நான்கு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஏ. எம். ஹைஸ்கூல், மருதாங்கோடு, 4 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆண்டிகோட்டில் ஒரு எய்டெட்–ஸ்கூல், மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அருமனையில் ஒரு எய்டெட்–ஸ்கூல், $4\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அருமனையிலேயே ஒரு அரசினர் உயர்நிலைப்பள்ளி, $4\frac{1}{2}$ கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. ஆக, நான்கு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அவை பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற இடத்தில் உயர்நிலைப்பள்ளியாக்குவதற்குரிய இட வசதி இருக்க வேண்டும். இட வசதியோடு ஐந்து எக்கர் நிலமும், கட்டட வசதிகளும் இருக்கவேண்டும். மேலும், டெபாசிட் கட்டவேண்டும். இந்த நிபந்தனைகளையெல்லாம் பூர்த்திசெய்யும் நிலை இருந்து, அது குறித்து மாவட்ட முதன்மை கல்வியதிகாரி மூலமாக எழுதியனுப்பினால் அதுபற்றி ஆராயலாம். மற்ற பள்ளிகள் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். உயர் பள்ளி துவக்கப்படுவதற்கு விதிக்கப்பட்டிருக்கக்கூடிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பங்கள் அனுப்பினால் அதுகுறித்து பிறகு ஆராயலாம்.